சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

வழக்கு எண். எம்.சி.ஓ.பி. 15/2019

**PW 1 செல்வி** **22.09.2023**

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

விபத்து வால்பாறை ஸ்டேன்மோர் சந்திப்பு அருகில் நடந்தது. ஸ்டேன்மோர் சந்திப்பு 5 ரோடுகள் சந்திக்கும் இடம் என்றால் சரிதான். விபத்து சமயம் இருசக்கர வாகனத்தில் நான், என் மகன், பேரன் ஆகியோர் பயணம் செய்தோம். நான் ஒரு பக்கமாக இருசக்கர வாகனத்தில் அமர்ந்திருந்தேன் என்றால் சரிதான். விபத்து ஏற்படுத்திய ஆம்னி வாகனம் நிறுத்தப்பட்டிருந்தது என்றால் ஓரமாக நிறுத்தப்பட்டிருந்தது. எங்கள் இருசக்கர வாகன ஓட்டுநர் முன்புறமாக நிறுத்தப்பட்டிருந்த வாகனத்தை கவனிக்காமல் பின்புறமாக கவனக்குறைவாக சென்று மோதிவிட்டார் என்றால் நிறுத்தப்பட்டிருந்த வாகனத்தின் பக்கவாட்டில் கதவை திடீரென திறந்ததால் விபத்து ஏற்பட்டது. சம்பவ இடம் அகலமான சாலை என்றால் சரியல்ல. சம்பவ இடத்தை காட்டும் வரைபடம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன். சம்பவ இடம் அகலமான இடம் என்றாலும் என் மகன் வாகனம் நிற்பதை பார்க்காமல் கவனக்குறைவாக ஓட்டிச் சென்று பின்புறமாக மோதி விபத்தை ஏற்படுத்தியுள்ளார் என்றால் சரியல்ல. சம்பவ இடம் 10 மீ. அகலம் உள்ளதாக நான் தாக்கல் செய்துள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்துக்குப்பின் ராமகிருஷ்ணா மருத்துவமனையில் சிக்சை பெற்றேன். நான் தொடர்சிகிச்சை பெறவில்லை என்றால் சரியல்ல, தற்போதும் மாத்திரை சாப்பிட்டுவருகிறேன். விபத்தினால் எனக்கு நிரந்தர வருவாய் இழப்போ, நிரந்தர ஊனமோஇல்லை என்றாலும் வயது மூப்பு காரணமாக நான் தற்போது சிகிச்சை பெற்று மருந்துகள் உட்கொண்டு வருகிறேன் என்றால் சரியல்ல. தொடர்சிகிச்சை பெற்றுவருவதற்கு ஆவணம்

தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் உப்பிரியாறு நிறுவனத்தில் வேலை பார்த்து வருகிறேன். 2012 ல் காயம் ஏற்பட்டதிலிருந்து நான் வேலைக்கு போவதில்லை. நான் வேலைக்கு போகாமல் இருப்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விருப்ப ஓய்வு பெற்றுவிட்டேன். நான் விபத்தினால் விருப்ப ஓய்வு பெறவில்லை என்றாலும் என் தனிப்பட்ட காரணத்துக்காக விருப்ப ஓய்வு பெற்றுள்ளேன் என்றாலும் சரியல்ல. விபத்து சமயம் நாங்கள் மூவரும் தலைக்கவசம் அணிந்திருக்கவில்லை என்றால் சரிதான். விபத்துக்கு நாங்களும் ஒரு காரணம் என்பதால் நஷ்டஈடு தொகையில் எங்கள் கவனமின்மைக்காக பகுதி தொகை கழித்து வழங்கப்பட வேண்டும் என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள தொகை அதிகம் என்றால் சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி
பொள்ளாச்சி